

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (27.12.2023) முகாம் அலுவலகத்தில், அகில இந்திய இரயில்வே தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவரும், தென்னக இரயில்வே மஸ்தூர் யூனியன் பொதுச் செயலாளருமான டாக்டர் ந. கண்ணையா அவர்கள் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு தென்னக இரயில்வே தொழிலாளர்கள் சார்பாக 75 இலட்சத்து 67 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் இந்து மஸ்தூர் சபா அகில இந்திய தலைவரும் தென்னக இரயில்வே மஸ்தூர் யூனியன் தலைவருமான சி.ஏ. ராஜா ஸ்ரீதர் உள்ளார்.

### நாகையில் ரூ.8.10 கோடி மதிப்பீட்டில்

# 6,796 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்!

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார்! என்.கௌதமன் முன்னிலை!

நாகை, டிச. 29 -

நாகை மாவட்டம் நாகையில் முத்தமிழ்றிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 6,796 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட வருவாய் அலுவலர் ரா.பேபி தலைமை தாங்கினார். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் முன்னிலை வகித்தார்.

விழாவில் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்து கொண்டு ரூ.8 கோடியே 10 லம்சம் மதிப்பீட்டில் 6,796 பயனாளிகளுக்கு விட்டு மனை பட்டா, ஈ.வெ.ரா.மணியம்மை நினைவு விதவைகள் திருமண உதவித் திட்டம், 5,575 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி ஆகியவற்றை வழங்கினார்.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இங்கு நடைபெறும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி முப்பெரும் விழாவாக நடைபெற்று கொண்டு இருக்கிறது. நாகை மாவட்டத்தில் உள்ள 51 மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் 5,376 மாணவ, மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டி வழங்கும் நிகழ்ச்சி, 121 பேருக்கு தாலிக்கு தங்கம் வழங்கும் நிகழ்ச்சி, அதைத் தொடர்ந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழாவை அரசு விழாவாக கொண்டாட வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளவாறு வருவாய் மற்றும் பேரிடர் சார்பில் வீட்டு மனை பட்டா இல்லாதவர்களுக்கு வீட்டு மனை பட்டா வழங்கம் நிகழ்ச்சி என முப்பெரும் விழாவாக நடைபெறுகிறது.

இன்று நாகையில் வழங்கப்படும் 1100 வீட்டு மனை பட்டாக்களும் மகளிர் பெயரில் தான் வழங்கப்படுகிறது. அந்த பெண்கள் தான் பட்டாவிற்கு உரிமையாளர்கள் அவர்கள் தான், கட்டப்போகும் வீட்டிற்கும் உரிமையாளர்கள் அவர்கள்தான். தமிழ்நாட்டில் பெண்கள் சொந்தக் காலில் நிற்கும் அளவிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்றிருக்கும் நாள் முதல் பெண்களுக்கு என்று பல்வேறு திட்டங்களை செய்து வருகிறார்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் நாகை நகரக் கழகச் செயலாளரும், நாகை நகர்மன்ற தலைவருமான இரா.மாரிமுத்து, மாவட்ட ஊராட்சி தலைவர் மங்கை எம்.சங்கர், மாநில ஆத்தமா குழு உறுப்பினர் மகா.குமார், நாகை ஒன்றியக் குழு தலைவர் வே.அனுசியா, சமூக பாது காப்புத் திட்ட தனித் துணை ஆட்சியர் கார்த்திகேயன், வட்டாட்சியர்கள் ரமேஷ், ரமேஷ்குமார், தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் குலோத்துங்கன், நாகை நகரக் கழக துணைச் செயலாளர் வெற்றிலை கடைசிவா உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

# "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவளவிழா ஆண்டு"

## புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் இரண்டாம் கட்டமாக வழங்கல்!



சென்னை, டிச. 29-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, "முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மற்றும் கழக பவளவிழா ஆண்டின்" புதிய உறுப்பினர் உரிமைச் சீட்டுகள் இரண்டாம் கட்டமாக வழங்கும் பணியினை நேற்று முன்தினம் (27.12.2023) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர் எஸ். ஆஸ்டின், தலைமைக் கழக துணை மேலாளர் என்.ஜெயக்குமார் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார். அதுபோது, அரியலூர் மாவட்டச் செயலாளரும் போக்குவரத்துத் துறை அமைச்சருமான எஸ்.எஸ்.சிவசங்கர், தனது மாவட்டத்திற்கான உறுப்பினர் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்டார்.

அதைப்போலவே, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட உறுப்பினர் சீட்டுகளை, மாவட்டச் செயலாளர் பரிந்துரையின் பேரில் மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம் டி.வெங்கடேசன் பெற்றுக் கொண்டார்.



முத்தமிழறிஞர், தலைவர் கலைஞர்அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தலைமைச் செயற்குழு, மாநில நிர்வாகிகள் சார்பாக தலைவர் கலைஞர் புகழ் பரப்பும் கருத்தரங்கம் திருச்சி முத்தையா மஹால், வயர்லெஸ் ரோடு, ஏர்போர்ட், பகுதியில் வண்ணை அரங்கநாதன் வரவேற்பில் சேகரன்,சபியுல்லா, கவிஞர் சல்மா முன்னிலையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு அமைச்சர், தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை வகித்தார். கருத்தரங்கத்தில் கலைஞர் ஓர் அதிசயம் என்னும் தலைப்பில் நாஞ்சில் சம்பத், கலைஞர் ஓர் கம்யூனிஸ்ட் மதுக்கூர் ராமலிங்கம், கலைஞர் காலத்தால் அழியாத கவிதைகள் : கவிஞர் சுகிர்தராணி ஆகியோர் உரையாற்றினர். இந்நிகழ்ச்சியில் மதிவாணன், செந்தில், கோவிந்தராஜ், செங்குட்டுவன், மூக்கன், லீலாவேலு, குணசேகரன், நூர்கான், சந்திரமோகன், செல்லையா, சரோஜினி, தமிழ்ச்செல்வம், ராஜேஸ்வரன், கார்த்திக், மணிவேல் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

